**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:STC.1878/2023**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமராசு | Caste | : |
| Father 's Name/ Husband Name | : குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(19.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். 03.07.2023 தேதி எதிரி வழங்கிய காசோலை எண்.000074 அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 18.07.2023ம் தேதி பாரத ஸ்டேட் வங்கியின் திருமங்கலம் கிளை ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.2 ஆகவும், 22.07.2023ம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும். எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை (எண்ணம் –2) அசல் ம.சா.ஆ.4 ஆகவும், 31.07.2023ம் தேதி எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**